**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை**
**அசல் வழக்கு எண்.99/2022**
**CNR NO.TNKR090001182022**

1. மருதை
2. ரத்தினம் (இறப்பு)
3. முத்துலட்சுமி
4. கோவிந்தராஜ் (Amended as per order in I.A.No.04/2023 dated.10.04.2023)
5. மாணிக்கம்
6. ராஜலிங்கம் ... வாதிகள்

**/எதிர்/**

1. மருதை
2. கன்னியம்மாள் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 17.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.R.லதா அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்**

1) தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு சங்கன் அம்பலக்காரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவர் 28.05.1981 ல் தனது மகன்

பொன்னன் மற்றும் மகள் வள்ளியம்மை இருவருக்கும் இரு வேறு செட்டில்மெண்ட் ஆவணங்களின் கீழ் தாவா சொத்துக்களை செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் பொன்னன் மற்றும் வள்ளியம்மை இருவரும் சொத்துக்களை சுவாதீனம் எடுத்து அவர்கள் பெயரில் பட்டா எண்.1726 மற்றும் 1730 ஆகியவற்றை பெற்று அனுபவம் செய்து வந்தனர். மேற்படி இரு நபர்களின் சுவாதீனம் குறித்து குளித்தலை சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு எண்.25/1995 வழக்கிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி பொன்னன் மற்றும் வள்ளியம்மை இருவரும் தங்கள் இளவர் குழந்தைகளுக்காகவும் சேர்த்து 27.05.2003 ல் தாவா சொத்துக்களை குறிப்பிட்ட நான்கெல்லைக்குள் 1, 2 வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி கிரைய ஆவணத்தின் படி 1,2 வாதிகள் சுவாதீனம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள். வாதிகள் பெயருக்கு பட்டா எண்.2330 வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்து வருகிறார்கள். பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

3) தாவா சொத்துக்கள் கிழமேல் பாதைக்கு வடக்கிலும், தெற்கிலும் அமைந்துள்ளது. இரண்டு அயிட்ட சொத்துக்களுக்கும் நடுவில் வண்டி பாதை உள்ளது. இந்நிலையில் 15.06.2022 அன்று தாவா சொத்துக்களை வாதிகள் விவசாயம் செய்ய சென்ற போது பிரதிவாதிகள் வாதிகளை மிரட்டி தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முற்பட்டனர். பிரதிவாதிகள் ஆள் பலமும், பண பலமும் உடையவர்கள். எனவே அவர்களுக்கு எதிராக வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் 2ம் வாதி இறந்து விட்டதால் அவரது வாரிசுகள் 3 முதல் 6 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

**<u>வாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் வழக்குரை</u>**

4) பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில் முதலில் தாக்கல் செய்த பதிலுரைக்கு முரணான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளனர். பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் ஒரு போதும் இருந்தது இல்லை. பிரதிவாதிகளின் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. பிரதிவாதிகள் பதிலுரையில் பத்தி

15 ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.936/8 மற்றும் 9 க்கு இடையில் வண்டி பாதை செல்வதாகவும், சர்வே எண்.931/11 ல் 60 செண்ட் இடம் இருப்பதாக சொல்லியுள்ள சங்கதிகளை பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும்.

5) சர்வே எண்.936/8 மற்றும் 9 ல் 2 ஏக்கர் 20 செண்ட் நிலமானது தென்வடலாக பிரிக்கப்பட்டு கிழக்குப்புறம் ஒரு ஏக்கர் 11 செண்ட் பொன்னனுக்கும், மேற்குப்புறம் ஒரு ஏக்கர் 7 செண்ட் பிரதிவாதிகளுக்கும் பிரிந்ததாக சொல்லும் சங்கதிகளை பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும். பொன்னன் மேற்குப்புறம் உள்ள ஒரு ஏக்கர் 7 செண்ட் நிலத்தை 27.05.2003 ல் வாதிகளுக்கு கிரையம் செய்துள்ளதாக சொல்வதும், வாதிகள் வண்டி பாதையை பயன்படுத்தி சர்வே எண்.936/9 ல் உள்ள ஒரு ஏக்கர் 11 செண்ட் நிலத்திற்கு சென்று வருவதாக சொல்வதையும் பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும்.

6) 1 ம் பிரதிவாதி தனது மகளின் மகனுக்கு 3 செண்ட் நிலத்தை 06.05.2010 ல் எழுதி கொடுத்ததாக சொல்வதை பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும். சர்வே எண்.936/8 ல் 1 ஏக்கர் 1 செண்ட் நிலமானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும். பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் ஒரு போதும் இருந்தது இல்லை. தாவா சொத்திற்கும், பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என கூடுதல் வழக்குரை தாக்கல் செய்துள்ளனர்.

## <u>1 ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2 ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்</u>

7) தாவா சொத்து ஆதியில் சங்கன் அம்பாலக்காரனுக்கு பாத்தியப்பட்டது என்பது பொய்யாகும். அவர் எழுதி வைத்ததாக சொல்லும் 28.05.1981 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேல்முறையீட்டு எண்.25/1995 வழக்கின் விபரம் வாதிகளுக்கு தெரிந்தே தாவா சொத்தினை வேண்டுமென்றே கிரையம் பெற்றுள்ளார்கள். 2 ம் மேல்முறையீட்டு எண்.491/2003 மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் CMP.No.9821/2003 மனுவில் இடைக்கால தடை உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட பின்னிட்டும் வாதிகள் கிரையம் பெற்றுள்ளது சட்டத்திற்கு முரணானதாகும். எனவே மேற்படி கிரைய ஆவணத்தின்படி வாதிகளுக்கு எந்த வித உரிமையும் கிடையாது.

8) தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளின் தகப்பனார் வழியில் பாகம் கோரி வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இறுதி முடிவு வருவதற்கு முன்பே சொத்தினை வில்லங்கம் செய்ய சங்கன் அம்பலக்காரன் தயார் செய்த ஆவணங்கள் தான் தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் ஆகும். பிரதிவாதிகளின் தகப்பனார் ராமசாமி என்ற ராமன் பெயரில் ஏற்பட்ட ஆவண எண்.2919/1950ன் படியான சொத்தையும் சேர்த்து வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்தை வாதிகளுக்கு சுவாதீனம் கொடுக்க பொன்னன் மற்றும் வள்ளியம்மைக்கு எவ்வித உரிமையும் இல்லை. பிரதிவாதிகளுக்கு தெரியாமல் வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>1ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்ட கூடுதல் பதிலுரையின் சுருக்கம்</u>**

9) 1ம் பிரதிவாதியின் பாட்டனார் வெங்கடாசலம். அவருக்கு பெருமாள், தாதன் (எ) கருமன், குட்டையன் (எ) குப்பாண்டி, ராமசாமி ஆகியோர்கள் வாரிசுகள். ராமசாமி 1ம் பிரதிவாதியின் தகப்பனார். ராமசாமியும் அவரது அண்ணன் பெருமாள் மகன் பிச்சையும் சேர்ந்து 1950ல் 60 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளனர். அதன் பைமாஷ் எண்.518, சர்வே எண்.931/11.

10) சர்வே எண்.936/9 மற்றும் 936/8 இரண்டும் சேர்ந்து மொத்தம் 2 ஏக்கர் 20 சென்ட் நிலத்தில் 1ம் வாதிக்கு 1 ஏக்கர் 11 சென்ட் நிலத்தை கிரையம் செய்த பொன்னன் தகப்பனார் சங்கனுக்கும், 1ம் பிரதிவாதியின் பெரியப்பா கருமனுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது. இதில் சர்வே எண்.936/9ல் 1 ஏக்கர் 11 சென்ட் நிலம் சங்கன் மகன் பொன்னனுக்கும், சர்வே எண்.936/8ல் உள்ள 1 ஏக்கர் 7 சென்ட் நிலம் பிரதிவாதியின் தந்தை ராமசாமிக்கும் பாத்தியப்பட்டது. ராமசாமிக்கு பிறகு தற்போது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது.

11) கடந்த 12.10.1981ல் 1ம் பிரதிவாதியின் தந்தை ராமசாமியும், அவரது அண்ணன் பேரனான பெருமாளும் சேர்ந்து சர்வே எண்.877/6ல் ஒரு ஏக்கர் 46 சென்ட் நிலமும், சர்வே எண்.998/1ல் ஒரு ஏக்கர் 32 சென்ட் நிலமும், சர்வே எண்.877/5ல் ஒரு சென்ட் நிலமும், சர்வே

எண்.871/1ல் 10 சென்ட் நிலமும் மொத்தம் 2 ஏக்கர் 92 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றனர். பொன்னனின் தகப்பனார் சங்கனும், 1ம் பிரதிவாதியின் பாட்டனார் வெங்கடாசத்தின் மகன்களும் ஒரே குடும்பமாக வசித்தனர். சில சொத்துக்களை கூட்டாக வாங்கினர். அவ்வாறு கிரையம் வாங்கிய சொத்துக்களில் 25.08.1981ல் சங்கன் தனது மகன் மற்றும் மகளுக்கு இரு ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ளார். அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

12) சர்வே எண்.913/11ல் உள்ள 60 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதியின் தந்தை ராமசாமிக்கும், அவரது மகன் பிச்சைக்கும் பாத்தியப்பட்டது. இந்நிலையில் அனைத்து சொத்துக்களும் தங்களுக்கு பாத்தியப்பட்டது என சங்கன் அவரது மகன் பொன்னன் குளித்தலை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதியின் பெரியப்பா பெருமாளின் மகன் பிச்சை, பிச்சையின் மகன்கள் பெருமாள், சீரங்கன் ஆகியோர்களுக்கு எதிராக அ.வ.எண்.386/1983 வழக்கு தாக்கல் செய்தனர். 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் சங்கன் வகையறாவிற்கு எதிராக பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.459/1983 என்ற வழக்கை தாக்கல் செய்தனர்.

13) இரு வழக்குகளுக்கும் 06.09.1989ல் தீர்ப்பு அளிக்கப்பட்டு அ.வ.எண்.386/1983 வழக்கு தள்ளுபடி செய்தும், அ.வ.எண்.459/1983 வழக்கை தீர்ப்பு செய்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு எண்.98/1997 மற்றும் மேல்முறையீட்டு எண்.25/1995 இரு வழக்குகளிலும் 24.06.2002ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இரு மேல்முறையீடும் அனுமதிக்கப்பட்டது. அதை எதிர்த்து 1ம் பிரதிவாதியின் வகையறா 2ம் மேல்முறையீட்டு எண்.491/2003 தாக்கல் செய்து அதில் இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளார்.

14) தற்போது 2ம் மேல்முறையீடு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் தாவா சொத்துக்களை வாதிகள் கிரையம் பெற்று உள்ளது சட்டத்திற்கு முரணானதாகும். வாதிகள் சர்வே எண்.936/9ல் உள்ள 1 ஏக்கர் 10 சென்ட் நிலத்தை மட்டும் கிரையம் செய்தது தான் பிரதிவாதிக்கு தெரியும். சர்வே எண்.931/11ல் உள்ள 60 சென்டில் 30 சென்ட் நிலத்தை

கிரையம் பெற்றது பிரதிவாதிக்கு தெரியாது. இந்த வழக்கு போட்ட பின்னிட்டு தான் மேற்படி வழக்கு விபரம் தெரியும். ஏனெனில் சர்வே எண்.931/11ல் உள்ள 60 சென்ட் நிலம் முழுவதும் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது.

15) சர்வே எண்.931/11ல் உள்ள 60 சென்ட் நிலத்திற்கும், சர்வே எண்.936/8 மற்றும் 936/9ல் உள்ள நிலத்திற்கும் நடுவில் கிழமேல் வண்டி பாதை உள்ளது. சர்வே எண்.936/8ல் 1 ஏக்கர் 7 சென்ட் நிலம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகும். சர்வே எண்.936/9ல் ஒரு ஏக்கர் 11 சென்ட் நிலம் சங்கன் மகன் பொன்னனுக்கு பாத்தியப்பட்டது. அதை வாதி 27.05.2003ல் கிரையம் பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.936/8ல் 1 ஏக்கர் 6 சென்ட் நிலத்தை தனது மூத்த சகோதரியின் மகன்கள் சங்கப்பிள்ளை, பொன்னம்பலத்திற்கு தலா 3 சென்ட் வீதம் 06.05.2010ல் கிரையம் கொடுத்துள்ளார்.

16) 2ம் மேல்முறையீட்டில் இடைக்கால தடை உத்தரவு உள்ள நிலையில் வாதிகள் கிரையம் பெற்றது ஏற்கத்தக்கதல்ல. வாதிகளுக்கு இடையே உள்ள உறவு முறை குறித்து வாதிகளே நிரூபிக்க வேண்டும். தாவா சொத்திற்கும், வாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

17) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்கள்</u>**

| | |
|---|---|
| 1. | Whether the plaintiffs are the absolute owner of the suit properties? |
| 2. | Whether the plaintiffs are in possession of the suit properties? |
| 3. | Whether the suit is maintainable without seeking Declaration? |
| 4. | Whether the plaintiffs are entitled for the relief of permanent injunction? |
| 5. | To what other relief? |

18) வாதிகள் தரப்பில் 1ம் வாதி மருதை வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், 3ம் நபரான சங்கன் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.6 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி மருதை பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், பி.சா.2 ஆக 3ம் நபரான வீரமலை விசாரணை செய்யப்பட்டு, பி.சா.ஆ.10 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>எழுவினா எண்கள்.1 மற்றும் 2ன் தீர்வு</u>

**வாதிகள் தாவா சொத்துக்களின் உரிமையாளர்களா?**

**வாதிகள் தாவா சொத்துக்களில் சுவாதீனத்தில் இருக்கிறார்களா?**

19) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு சங்கன் அம்பலக்காரன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் தனது மகன் மற்றும் மகளுக்கு 28.05.1981ல் இரு வேறு தான செட்டில்மெண்ட் ஆவணங்களின் மூலமாக தாவா சொத்துக்களை தானம் செய்து கொடுத்ததாகவும், மேற்படி தேதியில் இருந்து சங்கனின் வாரிசுகளான பொன்னன் மற்றும் வள்ளியம்மை இருவரும் தாவா சொத்துக்களின் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வந்து தங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்து வரி செலுத்தி வந்ததாகவும், பின்னிட்டு 27.05.2003ல் பொன்னன் மற்றும் வள்ளியம்மை தனது குடும்பத்தாருடன் சேர்ந்து வாதிகளுக்கு தாவா சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்ததாகவும் வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

20) மேற்படி வாதத்தை நிரூபிக்க வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1–27.05.2003ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பொன்னன் மற்றும் வள்ளியம்மை இருவரும் தங்கள் குடும்ப நபர்களுடன் சேர்ந்து வாதிகளுக்கு சர்வே எண்.931/11ல் 30 சென்ட் நிலத்தையும், சர்வே எண்.936/9ல் ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலத்தையும் மொத்தம் ஒரு ஏக்கர் 40 சென்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

21) மேற்படி சொத்துக்கள் கிரையம் கொடுத்த பொன்னன் மற்றும் வள்ளியம்மைக்கு 28.05.1981ல் தான செட்டில்மெண்ட் ஆவண எண்கள்.530/1981, 531/1981ன் படி பாத்தியப்பட்டும், குளித்தலை சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு எண்.25/1995ன் படி தங்களது உரிமை உறுதி செய்யப்பட்டும், பட்டா எண்கள்.1726 மற்றும் 1730ன் படி பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்து சொத்துக்களை கிரையம் கொடுப்பதாக கண்டு கிரையம் செய்யப்பட்டுள்ளது.

22) வா.சா.ஆ.2–தாவா சொத்துக்களான தற்போதைய கணினி பட்டா எண்.2330, 1, 2 வாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.3–தாவா சொத்துக்களான தீர்வை செலுத்துவதற்கான அறிவிப்பு 1, 2 வாதிகள் பெயருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5–17.06.2022ம் தேதியிட்ட கேவியட் மனு. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதிகள் கிரையம் பெற்ற தேதியில் இருந்து தங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து வரி செலுத்தி அனுபவம் செய்து வருவதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

23) பிரதிவாதிகள் தரப்பில் 1981ல் வாதிகளின் கிரையதாரருக்கு அவரது தகப்பனார் ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்லப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவா சொத்துக்கள் மற்றும் பிற சொத்துக்கள் குறித்து ஏற்கனவே தாக்கல் செய்த மேல்முறையீட்டு எண்.25/1995ல் ஏற்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்றத்தில் 2ம் மேல்முறையீட்டு எண்.491/2003 நிலுவையில் இருப்பதாகவும், மேற்படி வழக்கில் தாவா சொத்துக்களை எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாதென 2003ல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அவ்வாறு உத்தரவு நிலுவையில் உள்ள சமயத்தில் வாதிகள் தாவா சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

24) மேற்படி வாதத்திற்கு ஆதரவாக பி.சா.1 மற்றும் பி.சா.2 விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2–2ம் மேல்முறையீட்டு எண்.491/2003 வழக்கில் CMP.No.4282/2003ன் உத்தரவு மற்றும் CMP.No.9821/2003 மனுவின் உத்தரவு சான்றிட்ட நகல்.

மேற்படி இரு உத்தரவுகளையும் பரிசீலனை செய்கையில், தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் குறித்து ஏற்கனவே தாக்கல் செய்த மேல்முறையீட்டு எண்.25/1995 தீர்ப்பிற்கு எதிராக 2ம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது என்பதும் அதில் இடைக்கால உறுத்துக்கட்டளைக்காக 2ம் மேல்முறையீடு முடிவடையும் வரை மேல்முறையீட்டில் கண்டுள்ள சொத்துக்களை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

25) மேற்படி மனுவில் பெருமாள், ஆறுமுகம் மற்றும் வள்ளியம்மை மூவரும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்படி உத்தரவானது 21.10.2003 தேதியன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் இடைக்கால உத்தரவு நிலுவையில் உள்ள சமயத்தில் வாதிகள் கிரையம் பெற்றுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

26) வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதிகளின் கிரையம் ஆனது 27.05.2003ல் பெறப்பட்டுள்ளது. ஆனால் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 உத்தரவானது 21.10.2003ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்டது போல இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னிட்டு வாதிகள் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், மேற்படி இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே வாதிகள் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

27) மேலும் வாதிகள் தரப்பில் மேல்முறையீட்டு எண்.25/1995ல் வாதிகளின் கிரையதாரரான பொன்னன் மற்றும் வள்ளியம்மை தாவா சொத்துக்களின் மீதான உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையிலேயே தாவா சொத்துக்களை தாங்கள் கிரையம் பெற்றதாகவும் வாதிட்டனர். மேற்படி வாதம் ஏற்கத்தக்கதாகவே உள்ளது.

28) பி.சா.ஆ.3–18.08.1950ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் பதிவு நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், ராமன் முத்திரையர், பிச்சைக்கார முத்திரையர் இருவரும் சேர்ந்து பைமாஷ் எண்.518ல் 60 சென்ட் நிலத்தையும், வேறு சில நிலங்களையும் கிரையம்

பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இதில் பைமாஷ் எண்.518 என்பது தற்போதைய சர்வே எண்.931/11 என பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. எனவே தாவா முதல் அயிட்ட சொத்தானது பிரதிவாதிகளின் முன்னோர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்டனர்.

29) பி.சா.ஆ.4–தாவா முதல் அயிட்ட சொத்தான சர்வே எண்.931/11 க்கான 25 ஆண்டுகளுக்குரிய வில்லங்க சான்றிதழ். மேற்படி ஆவணத்தில் பி.சா.ஆ.3 ஆவணத்தை தவிர வேறு எந்த ஒரு பதிவும் காணப்படவில்லை. பி.சா.ஆ.5–11.01.1921 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் பதிவு நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், அதில் கண்டுள்ள சங்கதிகளை தெளிவாக படிக்க இயலவில்லை. மேற்படி ஆவணத்திலும் கிரையம் செய்யப்பட்ட சொத்துக்கள் குறித்தும் தெளிவான சர்வே எண்களோ, விஸ்தீரணமோ காணப்படவில்லை.

30) பி.சா.ஆ.6–சர்வே எண்.936/8 ன் பட்டா. வெங்கடாச்சலத்தின் மகன் ராமசாமி என்பவர் பெயரில் மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாவா 2 ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.936/9 நிலத்துடன் சேர்ந்து சர்வே எண்.936/8 நிலமும் வாதிகளின் கிரையதாரரான பொன்னன் மற்றும் வள்ளியம்மை இருவரின் தகப்பனார் சங்கன் என்பவரும், 1 ம் பிரதிவாதியின் தகப்பனாரான ராமசாமி என்பவரும் சேர்ந்து கிரையம் பெற்றதாகவும், பின்னிட்டு இருவரும் பாகம் பிரித்துக் கொண்டதில் சர்வே எண்.936/8 ராமசாமிக்கும், சர்வே எண்.936/9 சங்கன் என்பவருக்கும் ஒதுக்கப்பட்டது என பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையில் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை.

31) தாவா 2 ம் அயிட்ட சொத்தானது வாதிகளின் கிரையதாரர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொண்டுள்ளனர். சர்வே எண்.936/8 பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என நிரூபிக்க அதன் பட்டா பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்துள்ளனர். மேற்படி சர்வே எண்ணில் உள்ள நிலத்தில் 1308 சதுரடி நிலத்தை அதாவது 3 செண்ட் நிலத்தை ராமசாமி மகன் மருதை

மற்றும் அவரது குடும்பத்தார் சேர்ந்து ஒரு சங்கப்பிள்ளை என்பவருக்கு 06.05.2010 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளனர்.

32) அதே தேதியில் 1ம் பிரதிவாதி தனது குடும்பத்தாருடன் சேர்ந்து 06.05.2010 ல் சர்வே எண்.936/8 ல் 3 சென்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி ஆவணங்கள் பி.சா.ஆ.7 மற்றும் பி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.9–மாதிரி வரைபடம். மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் பிரதிவாதிகளின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டது என பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்டனர்.

33) பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்துள்ள பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் சர்வே எண்.936/8 சொத்திற்குரியது என பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சொத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என இந்நீதிமன்றம் அறிய முடிகிறது.

34) தாவா 2ம் அயிட்ட சொத்தின் சர்வே எண்.936/9 ஆகும். மேற்படி சொத்து வாதிகளின் கிரையதாரர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என பிரதிவாதிகளே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மேற்கொண்டு தாவா 2ம் அயிட்ட சொத்து குறித்து விவாதிக்க அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே தாவா 2ம் அயிட்ட சொத்தானது வாதிகளுக்கு கிரையம் கொடுத்த பொன்னன் மற்றும் வள்ளியம்மை குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

35) தாவா 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த 2ம் மேல்முறையீட்டு எண்.491/2003 வழக்கானது நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி வழக்கில் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு நிலுவையில் உள்ளது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டிருந்தாலும் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் தாவா 2 அயிட்ட சொத்துக்களுமே மேற்படி 2ம் மேல்முறையீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

36) இருப்பினும் பிரதிவாதிகள் தரப்பில் 2ம் அயிட்ட சொத்து வாதிகளின் கிரையதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் 2ம் அயிட்ட சொத்திற்கு எதிராக 2ம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால உத்தரவு பெறப்பட்டுள்ளது. வாதிகளின் கிரையதாரர்கள் தங்களுக்கு 1981ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து மேல்முறையீட்டு எண்.25/1995ல் தங்களின் உரிமை உறுதி செய்யப்பட்ட பின்னிட்டு எவ்வித தடை உத்தரவும் இல்லாத சமயத்தில் வாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளனர் என ஏற்கனவே முடிவு செய்துள்ள நிலையில் வாதிகள் உண்மையான உரிமையாளர்களிடம் இருந்து முறையாக கிரையம் பெற்றுள்ளனர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

37) 2ம் மேல்முறையீட்டில் தீர்வு காணப்படும் நிலையில் தாவா சொத்துக்களின் உரிமையானது உறுதி செய்யப்படும். 2ம் மேல்முறையீடானது 2003ம் வருடம் தாக்கல் செய்த பின்னிட்டு சுமார் 22 வருடங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தற்போது வரை நிலுவையில் உள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் மேற்படி மேல்முறையீடு தற்போதும் நிலுவையில் உள்ளது என்பதற்கான எந்த ஒரு ஆவணங்களையும் இரு தரப்பினரும் தாக்கல் செய்யவில்லை.

38) மேலும் வாதிகள் இவ்வழக்கில் தங்கள் உரிமையை நிலை நாட்ட எந்த ஒரு பரிகாரத்தையும் கோரவில்லை. மாறாக தாங்கள் கிரையம் பெற்ற சொத்தில் அனுபவத்தையும், சுவாதீனத்தையும் பிரதிவாதிகள் இடைறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளனர். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தற்போது தாவா சொத்துக்களின் உரிமையாளர்கள் வாதிகள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

39) மேலும் வாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்பதை பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். இவர் தனது குறுக்கு விசாரணையில், "1, 2 வாதிகள் 27.05.2003ல் கிரையம் வாங்கினர் என்றால் சரிதான். 1, 2 வாதிகள் கூட்டாக கிரையம் பெற்று தற்போது வரை கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சங்கன்

அம்பலக்காரன் தாவா சொத்தை பொறுத்து பொன்னன், வள்ளியம்மைக்கு தனித்தனியாக தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் சரிதான். சங்கன் அம்பலக்காரருக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் கூட்டுக் குடும்பமாக இருந்து சம்பாதித்திருக்கலாம், அவர் பெயரில் கிரைய பத்திரம் இருக்கலாம், எனக்கு சரியாக தெரியவில்லை. சங்கன் பெயரில் தனியாக பட்டா இருந்தது என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்திற்கு தற்போது 1, 2 வாதிகள் பெயரில் தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா 2ம் அயிட்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான். தாவா 1ம் அயிட்ட சொத்திற்கு நான்குபுறமும் வரப்பு உள்ளது என்றால் சரிதான். 1, 2 வாதிகள் தாவா சொத்தை 2003ல் கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். வாதிகள் கிரையம் பெற்றதை தற்போது வரை ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்" என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

40) மேற்படி சாட்சியத்தில் இருந்து தாவா சொத்துக்களை வாதிகள் 2003ல் கிரையம் பெற்றதில் இருந்து அவர்கள் தான் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதை பி.சா.1 தனது சாட்சியத்தின் மூலம் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பில் விசாரித்த பி.சா.2ம் தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

41) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியங்கள் மூலமாக தாவா சொத்துக்களில் வாதிகள் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வருகின்றனர் என்பதை அறிய முடிகிறது. எனவே எழுவினாக்கள் 1 மற்றும் 2 வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>எழுவினா எண். 3 ன் தீர்வு</u>**

**விளம்புகை பரிகாரம் கேட்காத இவ்வழக்கு நிலைக்கத்தக்கதா?**

42) பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளுக்கு தாவா சொத்துக்களின் மீதான உரிமையை ஆட்சேபணை செய்துள்ள நிலையில் தாவா சொத்துக்கள் குறித்து வாதிகள் விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்றும், அவ்வாறு கேட்காத இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என வாதிட்டனர். வாதிகள் தரப்பில் வாதிகளுக்கு கிரையம் கொடுத்த

பொன்னன் மற்றும் வள்ளியம்மைக்கோ தாவா சொத்தின் மீது இருந்த உரிமையானது மேல்முறையீட்டு எண்.25/1995 வழக்கிலேயே உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது வரை மேற்படி தீர்ப்பு இறுதியானதாக உள்ள நிலையில் வாதிகளின் கிரையதாரர்களின் உரிமையானது நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும், எனவே வாதிகள் உண்மையான உரிமையாளர்களிடம் இருந்து கிரையம் பெற்றுள்ள நிலையில் தங்களது உரிமை குறித்து விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

43) மேல்முறையீட்டு எண்.25/1995 வழக்கு குறித்து பிரதிவாதிகள் தரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும் பி.சா.1 தனது குறுக்கு விசாரணையிலேயே வாதிகள் கிரையம் பெற்றது குறித்தும் தற்போது வரை வாதிகள் சுவாதீனத்தில் உள்ளது குறித்தும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் 2ம் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் மட்டுமே வாதிகளின் உரிமையை ஆட்சேபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே வாதிகள் தாவா சொத்துக்களின் மீதான தங்கள் உரிமைகள் குறித்து விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டுமென்ற பிரதிவாதிகளின் எதிர் வாதமானது ஏற்கத்தக்கதல்ல என மேற்படி எழுவினா வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>எழுவினா எண்.4 ன் தீர்வு</u>**

**வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

44) தாவா சொத்தை வாதிகள் கிரையம் பெற்ற பின்னிட்டு தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வருவதாகவும், பிரதிவாதிகள் தங்கள் ஆட்களுடன் சேர்ந்து தாவா சொத்தில் 15.06.2022 மற்றும் 25.06.2022 ஆகிய தேதிகளில் வாதிகளின் சுவாதீனத்தில் இடையூறு கொடுத்ததாகவும் மேலும் 17.06.2022 ல் பிரதிவாதிகள் வாதிக்கு எதிராக நீதிமன்றத்தில் முன் எச்சரிக்கை மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது வாதிகளுக்கு சார்வு செய்யப்பட்டது என்றும் வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

45) இதற்கு ஆதரவாக வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள முன் எச்சரிக்கை மனுவானது வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவை பரிசீலனை செய்கையில், 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு எதிராக குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், குளித்தலை சார்பு நீதிமன்றத்திலும் முன் எச்சரிக்கை மனு தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

46) மேலும் 2ம் மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில் பிரதிவாதிகள் வாதிகளுக்கு இடையூறு கொடுத்ததாக வாதிகள் தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. மேலும் தாவா சொத்துக்கள் வாதிகளால் கிரையம் பெறப்பட்டு அவர்களது அனுபவத்தில் உள்ளது என வாதிகள் தரப்பில் நிரூபித்துள்ள நிலையில் வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தைப் பெற உரிமை உடையவர்கள் என முடிவு செய்து மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

**எழுவினா எண்.5 –ன் தீர்வு**

**வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

47) வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்துள்ள நிலையில் வாதிகளுக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் இல்லை என முடிவு செய்து மேற்படி எழுவினா எண்.5 ற்கு தீர்வு காண்கிறேன்.

**முடிவாக,**

இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 23ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.23 06:23:54 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 மருதை (1ம் வாதி)

வா.சா.2 சங்கன் (3ம் நபர்)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.05.2003 | கிரைய ஆவணம் (7 பக்கங்கள்) | அசல் |
| வா.சா.ஆ.2 | 21.06.2022 | பட்டா எண்.2330 | கணினி நகல் |
| வா.சா.ஆ.3 | 09.09.2003 | சிட்டா | உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | 17.06.2022 | மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கேவியட் அறிவிப்பு | சார்வு நகல் |
| வா.சா.ஆ.5 | 17.06.2022 | சார்பு நீதிமன்ற கேவியட் அறிவிப்பு | சார்வு நகல் |
| வா.சா.ஆ.6 | – | சங்கனின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

பி.சா.1 – மருதை (1ம் பிரதிவாதி)

பி.சா.2 – வீரமலை (3ம் நபர்)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 21.10.2003 | CMP No.4282/2003 உயர்நீதிமன்ற உத்தரவு | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.2 | 21.10.2003 | CMP No.9821/2003 உயர்நீதிமன்ற உத்தரவு | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.3 | 18.08.1950 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| பி.சா.ஆ.4 | 30.10.2023 | 01.01.1950 முதல் 31.12.1974 வரையிலான வில்லங்க சான்று | |
| பி.சா.ஆ.5 | 11.01.1921 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.6 | – | பட்டா எண்.1215 | உண்மை நகல் |
| பி.சா.ஆ.7 | 06.05.2010 | கிரைய ஆவணம் (11 பக்கங்கள்) | அசல் |
| பி.சா.ஆ.8 | 06.05.2010 | கிரைய ஆவணம் (11 பக்கங்கள்) | அசல் |
| பி.சா.ஆ.9 | – | தாவா மாதிரி வரைபடம் | அசல் |
| பி.சா.ஆ.10 | – | வீரமலை ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.23 06:24:03 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**********************************

**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.99/2022**

**D.D.23.03.2026**

**AFT**

*******************************